## வினா எண் :: 6.1.4.3.C

**இரு எண்களை ஒப்பிடுதல் - பயிற்சி**

அன்புமணியும் அவனுடைய 6 நண்பர்களும் ஆறாம் வகுப்பு அரையாண்டுத்தேர்வில் எடுத்த மொத்த மதிப்பெண்கள் பின்வருமாறு.

அன்புமணி - 412, குமார் - 376, கபிலன் - 350, அறிவழகன் - 428, சுரபி - 402, பல்லவி - 373 மற்றும் சரண்யா - 397.

## வினா

மேலே கொடுக்கப்பட்டுள்ள தரவுகளின் அடிப்படையில், கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிக்க.

(A) மாணவர்கள் பெற்ற மதிப்பெண்களை வைத்து அவர்களை ஏறுவரிசைப்படுத்துக.

(B) மிக அதிக மதிப்பெண் பெற்ற மாணாக்கர் யார்?

(C) இரண்டாவது அதிக மதிப்பெண் பெற்ற மாணாக்கர் யார்?

(D) மிகக்குறைந்த மதிப்பெண் பெற்ற மாணாக்கர் யார்?

## விடை

வினா எண் (A)-யின் விடை

| வரிசை எண் | மாணாக்கரின் பெயர் | பெற்ற மதிப்பெண்கள் |
|---|---|---|
| 1 | அன்புமணி | 412 |
| 2 | குமார் | 376 |
| 3 | கபிலன் | 350 |
| 4 | அறிவழகன் | 428 |
| 5 | சுரபி | 402 |
| 6 | பல்லவி | 373 |
| 7 | சரண்யா | 397 |

| ஏறுவரிசை எண் | மாணாக்கரின் பெயர் | பெற்ற மதிப்பெண்கள் |
|---|---|---|
| 1 | கபிலன் | 350 |
| 2 | பல்லவி | 373 |
| 3 | குமார் | 376 |
| 4 | சரண்யா | 397 |
| 5 | சுரபி | 402 |
| 6 | அன்புமணி | 412 |
| 7 | அறிவழகன் | 428 |

## விடை

வினா எண் (B)-யின் விடை

மிக அதிக மதிப்பெண் பெற்ற மாணாக்கர் **428** மதிப்பெண் பெற்ற **அறிவழகன்** ஆகும்.

## விடை

வினா எண் (C)-யின் விடை

இரண்டாவது அதிக மதிப்பெண் பெற்ற மாணாக்கர் **412** மதிப்பெண் பெற்ற **அன்புமணி** ஆகும்.

## விடை

வினா எண் (D)-யின் விடை

மிகக்குறைந்த மதிப்பெண் பெற்ற மாணாக்கர் **350** மதிப்பெண் பெற்ற **கபிலன்** ஆகும்.

Sum & solution prepared on Thursday 6th May, 2021 :: 06:03 Hrs.
All rights related to content above such as creation of the problem, solution, voice over, Video creation are reserved to V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046. Regd :: 4/16/2020 dt. January 31, 2020.